1972 மார்ச் 17]

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, பெ
இண்டியா இன்ஸ்ட்டிட்யூட்' இருக்கிறது. அதேபோல இங்கே
அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தமிழ்நாட்டிலுள்ள மனநோய மருததுவ மனை அகில இந்தியாவிலும் சிறப்புடையதாக இருக்கிறது. சிறப்பு பயிற்சி பெற்ற பலர் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். "கைக்யாட்ரி' சிறப்பு பயிற்சி தகுதியுடையவர்களும் இருக்கிறார்கள். பெங்களூரில் உள்ள அளவுக்கு இது சிறப்பாக இயங்குகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

செவிலியர்களுக்கு அடையாள எழுத்துக்கள்

*534 வின.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவ மனையில் பணிபுரியும் நர்சுகளுக்கு அடையாளத்துக்காக M.N.S. எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளதை மாற்றி T.N.S. என ஆக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசாங்க மருத்துவமனைகளில் பணி புரியும் ஆண் செவிலியர் அணியும் 'M.N.S.' (Madras Nursing Service) என்ற அடையாள எழுத்துக்களை 'T.N.N.S.' (Tamil Nadu Nursing Service) என்று உடனடியாக மாற்றும்படி நலப்பணிகள் மற்றும் குடும்பநலத்துறை இயக்குநருக்கும், மருததுவக கல்வி இயக்குநருக்கும் அரசாங்கத்தால் ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, மருத்துவத் துறையின் பல் வேறு பிரிவுகளில் கொடுக்கப்பட்டுள்ள அடையாளச் சின்னங்களில் ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அதை மாற்றி, தமிழ் எழுத்துக்கள் பொறிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தமிழ் எழுத்துக்கள் வழங்குவதில் தடை இல்லை. ஆனால் ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிற ஆங்கில எழுத்துக்கள் தெளிவாக இருப்பதோடு, அதை இப்போது மாற்ற முயன்றால் தெளிவு குறைவாக இருக்கும் என்று கருதப்படுகிறது. காலக்கிரமத்தில் இந்த மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனையில் நர்சுகளுக்குக் கொடுக்கப்பட்டு வரும் 30 ரூபாய் அலவன்ஸை ரத்து செய்யப் போகிறார்கள் என்று சொல்வது உண்மையா ? அதை ரத்து செய்யாமலிருக்க வழி வகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே அந்தக் கேள்வி எழாது. அந்தக் கேள்வியை எழுப்புவதற்கு ஏதுவாக மானியம் வருகிறது. அப்பொழுது அந்தக் கேள்வியை எழுப்பலாம்.

**திரு. கே. ஆர். கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, செவிலியர்கள் அணியும் உடை கவர்ச்சியும் வசதியும் இல்லாமல் இருப்பதால், நம்நாட்டு நாகரிகத்திற்கு ஏற்ற வகையில் உடை அளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அங்கத்தினருக்கு உடை கவர்ச்சியாக இருக்க வேண்டுமென்ற அக்கறை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கத்திற்கு உள்ள அக்கறை மிக்க வசதியாகப் பணியாற்றக்கூடிய வகையில் உடை இருக்க வேண்டுமென்பது. இப்போது அவர்கள் அணிகின்ற உடைதான் பணியாற்றுவதற்கு வசதியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சூலூரிலுள்ள மருத்துவ மனை

* 535.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடம் தொகுதியில் உள்ள சூலூர் ஆஸ்பத்திரியை விஸ்தரித்து நோயாளிகளுக்கு தங்கி சிகிச்சையளிக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.

செம்மிபாளையத்துக்கு ஆரம்ப சுகாதார நிலையம்

* 536 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பல்லடம் தொகுதியில் பல்லடம் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட செம்மி பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று கட்டப்பட்டு கட்டடம் பேஸ் மட்டம் வந்து நின்று விட்டது உண்மையா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.

அரசு அச்சகத்தில் இரவு நேரத் தொழிலாளர்கள்

* 537 வினா.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அச்சகங்களில் இரவு நேரங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு இலவசமாக ரொட்டியும் டீயும் கொடுக்க திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?